பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.98** **நாள்: 27.07.2016**

## நெசப்பாக்கம் புதிய இணைப்பு சாலைப்பணிகளை மாண்புமிகு மேயர் அவர்களும், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் ஆய்வு !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்களும், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.விருகை வி.என்.ரவி அவர்களும் 26.07.2016 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, வார்டு–137க்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் அண்ணா பிரதான சாலை மற்றும் நெசப்பாக்கத்தில் உள்ள ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலையை ஆய்வு செய்தார்கள்.

நெசப்பாக்கம் இணைப்பு சாலையானது ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது. எம்.ஜி.ஆர் நகர் அண்ணா பிரதான சாலை மற்றும் நெசப்பாக்கத்தில் உள்ள ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலையானது 18 மீட்டர் அகலமும், 258 மீட்டர் நீளமும் உடையது. இந்த சாலை அமையவிருக்கும் இடம் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்திற்கு சொந்தமான இடத்தின் வழியாக செல்கிறது. இச்சாலை அமைக்க கீழ்நிலை கழிவுநீர் தொட்டியை அப்புறப்படுத்தி வேறு இடத்தில் அமைக்க தேவைப்படும் ரூ.2.51 கோடியை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சாலை அமைப்பதால் ஏற்படும் பசுமை போர்வை இழப்பிற்கு பதிலாக 4640 சதுர மீட்டர் இடத்தை அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவில் அரசாணை பெற்று குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கப்படும். மேலும், இந்த சாலை அமைக்கும் பொழுது அகற்றப்படும் 30 நன்கு வளர்ந்த மரங்கள் வேறு இடத்தில் நடப்படும். தற்பொழுது குடிநீர் வாரிய பணிகள் நடைபெறுவதால் அதற்கு ஏற்றாற்போல் தற்பொழுது சுமார் 60 அடி சாலை உடனடியாக அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர். சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக்குழுத் தலைவர் திரு.எல்.ஐ.சி. மாணிக்கம் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் திரு.சி.சுப்ரமணி, திரு.ம. குணசேகரன், திரு.கே.மலைராஜன், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அலுவலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**